**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE (FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.NO. 159/2021**

**Deposition of Witness for P.W.5**

| | | |
|---|---|---|
| **NAME** | - | சரளா |
| **HUSBAND'S NAME** | - | ரமேஷ் |
| **VILLAGE** | - | |
| **TALUK** | - | |
| **CASTE** | - | |
| **OCCUPATION** | - | |
| **RELIGION** | - | |
| **AGE** | - | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 21.11.2023.**

**A1 toA3 . A5 and A7 Present A6 Produced. A4 ABSENT. PETITION U/S.317 CRPC FILED AND ALLOWED.**

நான் தற்போது வண்ணாந்தாங்கல் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிகிறேன் ஆஜரில் எதிரிகளில் இடம் இருந்து வலமாக 5 ஆவதாக உள்ள எதிரியை எனக்கு தெரியும் (லோகு). 2020 ஆம் ஆண்டு ஒடுகத்துார் கிராம நிர்வாக அலுவலராக பணி புரிந்த போது 25.11.2020 தேதிநான் என்னுடைய அலுவலகத்தில் இருந்த போது காலை சுமார் 10 மணிக்கு வேப்பங்குப்பம் காவல் நிலையத்தில் இருந்து தொலைபேசி மூலம் லோகு என்பவர் ஒரு கொலை வழக்கு சம்மந்தமாக காவல் நிலையத்தில் சரண் அடைந்துள்ளதாகவும் அவரிடம் விசாரணை செய்யப்போவதாகவும் அதற்கு சாட்சியாக இருக்க வேண்டி காவல் நிலையத்திற்கு வர சொல்லி கேட்டதன் பேரில் நானும் என்னுடைய உதவியாளர் செல்வராசா என்பவரும் வேப்பங்குப்பம் காவல் நிலையம் சென்றோம். அங்கு எதிரி லோகு எங்கள் முன்னிலையில் காவல் ஆய்வாளர் அவரிடம் விசாரணை செய்த

போது அவர் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சீனு என்ற சீனிவாசனை நாங்கள் எல்லோரும் சேர்ந்து 2014 ஆம் ஆண்டில் அடித்து கிணற்றில் தூக்கி போட்டு விட்டதாக சொன்னார் அவருடன் இருந்த நபர்களில் பெயர்களாக ஆறுமுகம், வெங்கடேசன், கார்த்தி, சிலம்பரசன், மணிகண்டன் ஆகியோர்கள் இருந்ததாக சொன்னார்கள். அதன் பிறகு காவல் ஆய்வாளர் லோகுவை கைது செய்தார். எதிரி லோகு கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் என்னுடைய உதவியாளர் செல்வராசாவும் சாட்சிகளாக கையொப்பம் போட்டோம். தற்போது என்னிடம் காட்டப்படும் எதிரி லோகு ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலாவதாக உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையதுதான் அது அ.சா.ஆ.3 ஆகும். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னிடம் விசாரணை செய்தார். அதன்பிறகு 2021 ஆம் ஆண்டில் 22.06.2021 ஆம் தேதி ஆறுமுகம் என்பவரை ஒடுகத்தூர் பேருந்து நிலையத்தில் கைது செய்து விசாரணை செய்து கொண்டு இருந்த போது நானும் என்னுடைய உதவியாளர் ஆதிகேசவன் என்பவரும் அந்த வழியாக நாங்கள் சென்ற போது காவல் ஆய்வாளர் விசாரணை செய்து கொண்டு இருப்பதை பார்த்து நாங்கள் அந்த இடத்திற்கு சென்றோம். அப்போது ஆறுமுகம் என்பவர் காவல் ஆய்வாளரிடம் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமுலத்தை காவல் ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார். அந்த ஒப்புதல் வாக்குமுலத்தில் நானும் என்னுடைய உதவியாளல் ஆதிகேசவனும் சாட்சிகளாக கையொப்பம் போட்டோம் ஆறுமுகம் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலாவதாக உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையதுதான் அந்த கையொப்பம் அ.சா.ஆ.4 ஆகும். எங்கள் முன்னிலையில் காவல் ஆய்வாளர் விசாரணை செய்த ஆறுமுகம் என்பவர் தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ள எதிரிகளில் இல்லை. இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னிடம் விசாரணை செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

ஆறுமுகம் என்பவரை ஒடுகத்தூர் பேருந்து நிறுதத்தில் காவல் ஆய்வாளர் விசாரணை செய்த போது அந்த ஆறுமுகம் நான் நேரடியாக பார்தேன் என்றால் சரிதான். அந்த ஆறுமுகம் என்பவர் தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லை.

லோகு என்பவரை எப்போது யார் முன்னிலையில் கைது செய்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. தொலைபேசி மூலம் தான் எனக்கு தகவல் வந்தது என்றால் சரிதான். நான் காவல் நிலையத்திற்கு போவதற்கு முன்னர் லோகு காவல் நிலையத்தில் எப்போது இருந்து இருந்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் காவல் நிலையத்திற்கு செல்வதற்கு முன்னர் போலீசார் லோகுவிடம் என்ன விசாரணை செய்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் போவதற்கு முன்னர் லோகுவை அடித்தார்களா அல்லது கட்டாயபடுத்தினார்களா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். வேறு யார் முன்னிலையிலாவது வாக்குமூலம் பெற்றார்களா என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை யார் தட்டச்சு செய்தார்கள் என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த ஒப்புதல் வாக்குமூலம் யார் உத்தரவின் பேரில் பெறப்பட்டது என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமுலத்தில் என்ன விவரங்கள் இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, நான் படித்து பார்த்து தான் கையொப்பம் போட்டேன். லோகு எந்த வாக்குமுலமும் கொடுக்கவில்லை என்றாலும் போலீசார் தயார் செய்த வாக்குமுலம் நானும் என்னுடைய உதவியாளரும் சாட்சிகளாக கையொப்பம் போட்டுள்ளோம் என்றாலும் சரியல்ல. ஆறுமுகத்தை பேருந்து நிலையத்தில் குறிப்பிட்டு எந்த இடத்தில் வைத்து கைது செய்தார்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் அந்த இடத்திற்கு போவதற்கு முன்னர் எவ்வளவு நேரங்களுக்கு முன்னர் போலீசார் அந்த இடத்திற்கு வந்தார்கள் என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆறுமுகத்தை நாங்கள் போவதற்கு முன்னர் எப்போது கைது செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆறுமுகத்தை எங்கு வைத்து கைது செய்தார்கள் என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் போவதற்கு முன்னர் யார் முன்னிலையில் கைது செய்தார்கள் என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆறுமுகம் கொடுத்த ஒப்புதல் வாக்குமுலத்தை யார் தட்டச்சு செய்தாகள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வைத்து பிரண்ட் அவுட் எடுத்து என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான். என்

முன்னிலையில் ஆறுமுகம் என்பவரை போலீசார் கைது செய்யவேயில்லை என்றாலும் ஆறுமுகம் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவேயில்லை என்றாலும் போலீசார் கேட்டு கொண்டதற்கிணங்க அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

P REVATHY

Digitally signed by P REVATHY